# மனநல சட்டத்தின்படி விருப்பமில்லாத சேர்க்கைகள் குறித்த நோயாளிகளுக்கான தகவல் தாள் (PsychKG)

அன்புள்ள (முதற்பெயர் / கடைசிப்பெயர்):

______________________________________________ ,

நீங்கள் கூடிய விரைவில் குணமடைவதற்கு உதவி செய்ய நாங்கள் விரும்புகிறோம்.

இந்தத் துண்டுப் பிரசுரத்தின் வாயிலாக, உங்களின் மிக முக்கியமான உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து நாங்கள் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். விரிவான சட்ட விவரங்களை வார்டில் காணலாம்.

## பிரித்து வைத்தலுக்கான காரணம்

### சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

உங்களுக்கு உடல்நிலை சரியில்லை என்பதாலும், உங்கள் நடத்தையானது உங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ கடுமையான ஆபத்தை உண்டாக்குகிறது என்பதாலும், நீங்கள் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறீர்கள்.

இதைச் செய்ய அனுமதிக்கும்

சட்டத்தின் பெயர் மனநல சட்டத்தின்படி விருப்பமில்லாத சேர்க்கைகள் என்பதாகும். இதன் சுருக்கம் “PsychKG NRW” என்பதாகும்.

## நீதித்துறை முடிவு (§ 14 PsychKG NRW)

### சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

நீங்கள் மருத்துவமனையில் இருக்க வேண்டுமா என்பதை ஒரு நீதிபதி முடிவு செய்வார்.

உங்களுக்குள்ள நோய் பற்றி உங்களிடம் பேசுவதற்கு இன்றோ அல்லது நாளையோ நீதிபதி வருகிறார்.
நீதிபதியிடம் நீங்கள் எது வேண்டுமானாலும் கூறலாம்.
ஒரு வழக்கறிஞரை வைத்துக் கொள்வதற்கும் உங்களுக்கு உரிமையுண்டு.

நீதிபதி வரவில்லையென்றால், நீங்கள் வெளியில் அனுப்பப்படுவீர்கள். உங்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர், மனநல சட்டத்தின்படி (PsychKG) விருப்பமில்லாத சேர்க்கைகளின்கீழ் ஒரு புதிய செயல்முறையை தொடங்காதவரை

நீதிபதியின் முடிவுக்கெதிராக, இரண்டு வார காலத்திற்குள் நீங்கள் நீதிமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக

மேல்முறையீடு செய்யலாம்.
மேல்முறையீடு செய்வதற்கு வார்டு ஊழியர் உங்களுக்கு உதவுவார்.

## ஆவணப்படுத்துதல் – ஆய்வு செய்வதற்கான உரிமை (§ 16 PsychKG NRW)

### சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

சிகிச்சையின்போது என்ன நடந்தது என்பதை ஊழியர் எழுதித்தருவார். நீங்கள் சரியானவுடன், எந்தவொரு வலுக்கட்டாயமான நடவடிக்கை குறித்தும் உங்களுடன் மீண்டும் விவாதிக்கப்படும். உங்களைப் பற்றி ஊழியர் எழுதிய அனைத்தையும் நீங்கள் படிக்கலாம்.

இதற்கு ஆய்வுக்கான உரிமை என்று பெயர்.

## வெளியில் செல்வதற்கான சுதந்திரம் (§ 16 Abs. 1 PsychKG NRW)

### சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

தோட்டத்திலோ அல்லது மொட்டை மாடியிலோ, குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம், நீங்கள் வெளியில் அனுமதிக்கப்படுவீர்கள்.

T

## அனுமதியின்போதான மருத்துவப் பரிசோதனை (§ 17 PsychKG NRW)

சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

கூடிய விரைவில் ஒரு மருத்துவர் உங்களைப் பரிசோதிப்பார்.

உங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இப்போதும் நீங்கள் அபாயகரமாக உள்ளீர்களா என்பதை ஒரு மருத்துவர் சரிபார்ப்பார்.

## ஒரு நம்பிக்கையான நபரின் அறிவிக்கை(§ 17 PsychKG NRW)

சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

நீங்கள் விரும்பினால், நீங்கள் மருத்துவமனையில் உள்ளீர்கள் என்று ஒரு நம்பிக்கையான நபருக்கு (நண்பர்கள், குடும்ப உறுப்பினர், பாதுகாவலர்) நாங்கள் சொல்வோம்.

நீங்கள் விரும்பினால், நாங்கள் ஒரு வழக்கறிஞரிடம் தெரிவிப்போம். உங்களுக்கு சட்டப்பூர்வ பாதுகாவலர் இருந்தால், அவருக்கு தாமாகவே தெரிவிக்கப்படும்.

நீதிபதியுடனான உங்கள் நேர்முகத் தேர்வில் இவர்கள் கலந்துகொள்ளலாம்.

# சிகிச்சை (§ 18 PsychKG NRW)

## சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

உங்கள் நோய்க்கான சிகிச்சையை நீங்கள் எங்களிடம் எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் அதற்கு சம்மதித்தால் மட்டுமே உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும். இதற்கு சம்மதம் என்று பெயர். இது மருந்துகள் கொடுப்பதற்கும் பொருந்தும். இந்த விதிக்கு சில விதிவிலக்குகளும் உள்ளன.
சிகிச்சை குறித்து உங்களுடன் விரிவாக விவாதிக்கப்பட வேண்டும்.

1. விதிவிலக்கு:
உங்கள் நோயினால் பெரும் ஆபத்து ஏற்படுமானால், உங்கள் விருப்பத்திற்கு மாறாக மருத்துவர் உங்களுக்கு சிகிச்சை அளிக்கலாம். உங்கள் நோய் தொடர்பான நடத்தையின் காரணமாக, உங்கள் உயிருக்கு ஓர் அபாயம் உள்ளது அல்லது உங்களுக்கோ அல்லது மற்ற நபர்களுக்கோ மிக மோசமான உடல்நல ஆபத்து உள்ளது எனில், ஒரு பெரும் அபாயம் உள்ளது.
ஒரு நீதிபதி அனுமதித்த பிறகே கட்டாய சிகிச்சை அளிக்கப்படலாம் என்ற ஒரு விதியும் உள்ளது.

2. விதிவிலக்கு:
மிகவும் அரிதான சூழ்நிலைகளில், நீதிபதியைக் கேட்காமலேயே மருத்துவர் கட்டாய சிகிச்சை அளிக்கலாம். இது எப்போதெனில், நீதிபதி வரும்வரையில் காத்திருக்க முடியாது என்று மருத்துவர் கருதினால்—ஏனெனில், இல்லையெனில், ஏதாவது கெட்டது நடக்கலாம்.
இந்த இரண்டு விதிவிலக்குகளுக்கும் கட்டாய சிகிச்சை என்று பெயர்.

T

# சிறப்புப் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் நடவடிக்கைகள் (§ 20 PsychKG NRW)

## சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

நீங்கள் உங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ குறிப்பிடும்படியாக அபாயகரமாக இருந்தால், பின்வரும் நடவடிக்கைகளை மருத்துவர் ஆணையிடலாம்:

1. நீங்கள் வெளியில் செல்ல முடியாது அல்லது
2. நீங்கள் தனியாக ஒரு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள கதவுகள் பூட்டப்படும் அல்லது
3. ஊழியர் உங்களைத் தடுப்புக் காவலில் வைக்கலாம், அல்லது
4. ஊழியர் உங்களைக் கட்டிலில் (படுக்கை) கட்டிவைக்கலாம்.

வேறு எந்த வழியாலும் பலன் இல்லை என்றால் (இல்லாதவரை) மட்டுமே இந்த நடவடிக்கைகள் அனுமதிக்கப்படும். இதற்குமேல் எந்த ஆபத்தும் இல்லையெனில், அந்த நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

30 நிமிடத்திற்கு மேல் நீங்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தால், அதற்கு நீதிபதி அனுமதியளித்திருக்க வேண்டும்.

நீங்கள் சரியானவுடன், நீங்கள் சரியாகக் கட்டி வைக்கப்பட்டீர்களா என்பது குறித்துச் சரிபார்க்குமாறு ஒரு நீதிபதி / குற்றவியல் நீதிபதியை நீங்கள் கேட்கலாம்.

## பிரித்து வைத்திருத்தலை முடித்தல் (§ 15 PsychKG und § 25 PsychKG)

சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

உங்களைப் பிரித்துவைத்தல் இன்னும் தேவையா என்று தினமும் சரிபார்க்கப்படுகிறது.

நீங்கள் சரியாகிவிட்டதாக உணரும்போது, நீங்கள்:

- விடுமுறையில் செல்ல அனுமதிக்கப்படலாம்
- வெளியில் அனுப்பப்படலாம் அல்லது
- தாமாக மேற்கொண்டு சிகிச்சை பெறலாம்.

## சொந்த உடைமைகள், வருகை, தொலைதொடர்பு, ஊடகம் மற்றும் புகைபிடித்தல் (§ 22 PsychKG)

சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)

உங்களிடம் அபாயகரமான பொருட்கள் ஏதேனும் இருந்தால், நீங்கள் அதனை பணிபுரியும் செவிலி ஊழியரிடம் ஒப்படைக்க வேண்டும். நீங்கள் வெளியில் அனுப்பப்படும்போது, உங்கள் பொருட்களை நீங்கள் திரும்பப் பெறுவீர்கள்.

உங்கள் கைபேசியையும் மடிக்கணினியையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் கடிதங்களை அனுப்ப அனுமதி உண்டு. கடிதங்களைப் பெறவும் உங்களுக்கு அனுமதி உண்டு. உங்களுக்கு விருப்பம் இருந்தால், உங்களைக் காண பார்வையாளர்களை அனுமதிக்கலாம்.

வார்டில் உள்ள மற்ற நபர்களையும் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

புகைபிடிக்கும் பகுதியில் மட்டுமே உங்களுக்குப் புகைபிடிக்க அனுமதி உண்டு. இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

LVR சிகிச்சையகத்தில் உள்ள பிற நபர்களை, அவர்களின் அனுமதியின்றி, புகைப்படம் எடுக்கவோ அல்லது ஒலிப்பதிவு செய்யவோ உங்களுக்கு அனுமதியில்லை.

## சிகிச்சைக்கான செலவுகள்

**சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)**

உங்களுக்கு மருத்துவக் காப்பீடு இல்லையென்றால், எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

LVR சிகிச்சையகத்தின் சமூக சேவைகள் இதற்கு உங்களுக்கு உதவும்.

## சிகிச்சை ஒப்பந்தம், நோயாளி மீதான தீர்ப்பாணை (§ 2 PsychKG NRW)

**சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)**

சில நேரங்களில், எங்களால் மீண்டும் உங்களுக்கு சிகிச்சையளிக்கப்படலாம்.

உங்களுக்கு எவ்வாறு சிறந்த முறையில் சிகிச்சையளிப்பது என்று எங்களுக்குத் தெரிவதற்காக, நீங்கள் மருத்துவருடன் ஒரு எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் போடலாம். இது சிகிச்சை ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.

ஒரு நோயாளி மீதான தீர்ப்பாணையையும் நாங்கள் கருத்தில் கொள்வோம்.

பின்னர் இந்த ஒப்பந்தம் சம்மந்தப்பட்ட அனைவருக்கும் பொருந்தும்படி ஆகும்.

## புகார்கள் (§ 24 PsychKG NRW)

**சுருக்கமான தகவல் (புரிந்து கொள்ள எளிதானது)**

நீங்கள் திருப்தியடையவில்லையெனில், நீங்கள் ஒரு புகார் அளிக்கலாம்.

பல்வேறு சாத்தியக்கூறுகள் உள்ளன. வார்டில் மேலோட்டமான நடைமுறை ஒட்டப்படும். அல்லது நீங்கள் ஊழியர்களைக் கேட்கலாம்.

பிற மேல்முறையீட்டுத் தெரிவுகளும் உள்ளன (முகவரிகளுக்கு இணைப்பைப் பார்க்கவும்):

**நீங்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகிறோம்!**
**உங்கள் LVR சிகிச்சையகம்**

# இணைப்பு:

## புகார் சாத்தியக்கூறுகள்

ஒரு புகார் அளிப்பதற்கான சாத்தியக்கூறு உங்களுக்கு எப்போதும் உள்ளது எ.கா. சிகிச்சை பற்றி.
நீங்கள் பெற்றுள்ளீர்கள் அல்லது வேறு ஏதாவது

**1. ஊழியர் தளத்தில் வார்டில்:**
செவிலிப் பணிபுரியும் ஊழியர், செவிலிப்பணி வார்டு அல்லது துறை மேலாண்மை மற்றும், நீங்கள் விரும்பினால், மருத்துவர்களிடம் பேசுங்கள்.

அல்லது:
**2. தனிப்பட்ட நோயாளி வழக்கறிஞர்கள், "ஒழுங்காணையர்கள்" என்றழைக்கப்படுகிற சிகிச்சையகத்தில் தளத்தில் உள்ளவர்கள்:**
நோயாளிகளுக்கு உதவுவதற்காக, LVR சிகிச்சையகத்தில், தனிப்பட்ட ஒழுங்காணையர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் உங்களுக்காக நேரம் செலவழிப்பார்கள். அவர்களிடம் தளத்தில் உள்ள உங்கள் கவலைகள் குறித்து நீங்கள் விவாதிக்கலாம். ஒழுங்காணையர்கள் அங்குள்ள நேரம் மற்றும் அவர்களது தொலைபேசி எண் ஆகியவற்றினை தளத்தில் உள்ள உங்கள் வார்டில் உள்ள அறிவிப்புப் பலகையில் காணலாம்.

அல்லது:
**3. தளத்தில் உள்ள LVR சிகிச்சையகத்தின் மருத்துவ இயக்குநரகத்திற்கும் நீங்கள் வரலாம். முன்பதிவின் வாயிலாக அவர்கள் உங்களிடம் பேசுவதில் மகிழ்ச்சியடைவார்கள்:**
முன்பதிவு செய்வதற்கு உங்களுக்கு உதவுவதில் வார்டு ஊழியர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

LVR சிகிச்சையகத்தின் மருத்துவ இயக்குநரகத்துக்கான தொடர்பு விவரங்கள்:

அல்லது:

**4. LVR சிகிச்சையகத்திற்கு வெளியே, பின்வரும் அலுவலக முகவரியிடுவதன் வாயிலாக நீங்கள் உங்கள் புகாருடன் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.**

Zentrales Beschwerdemanagement des Landschaftsverbandes Rheinland.

Landschaftsverband Rheinland/ ZBM
50663 Köln
தொலைபேசி: 0221/ 809 2255, மின்னஞ்சல்: beschwerden@lvr.de

அல்லது:

**5. இறுதியாக, மனநிலை பிரச்சினைகளைக் கொண்ட மக்களுக்கென வெவ்வேறு பிராந்தியங்களில் உள்ள தனிப்பட்ட ஆலோசனை மையங்களையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்**

### Region Köln

Beschwerderat Psychosoziale Arbeitsgemeinschaft (PSAG) Köln
c/o Rat und Tat e.V. Kempener Str. 135
50733 Köln, தொலைபேசி: 0163/ 383 1686, மின்னஞ்சல்: beschwerderat@web.de

### Region Düsseldorf

Unabhängige Beschwerdestelle Psychosoziale Arbeitsgemeinschaft (PSAK) Düsseldorf
கோல்னர் Str. (Kölner Str.) 180, 40227 Düsseldorf
தொலைபேசி: 0211/ 899 2622 Anrufbeantworter,
மின்னஞ்சல்: psag_beschwerdestelle@duesseldorf.de

### Region Duisburg-Essen

Unabhängige Beschwerdestelle der Psychosozialen Arbeitsgemeinschaft (PSAG) Duisburg
c/o Gesundheitsamt Herr Marcel Hellmich,
Ruhrorter Straße 195, 47119 Duisburg

தொலைபேசி: 0203/ 283 2709, மின்னஞ்சல்: beschwerdestelledu@gmx.de

### Region Krefeld

Psychosoziale Beschwerdestelle Krefeld
Westwall 134, 47798 Krefeld
தொலைபேசி: 02151/ 389 261 Anrufbeantworter, மின்னஞ்சல்: beschwerdestelle@psag-krefeld.de

### Region Viersen

Beschwerdestelle des Gemeindepsychiatrischen Verbundes Kreis Viersen
தொடர்பு கொள்ளவும்: BIS e.V., Klosterstr 5, 41379 Brüggen
தொலைபேசி: 02163/ 5622, மின்னஞ்சல்: info@bis-brueggen.de

அல்லது:

**6. உங்கள் பிரச்சினை போதுமான அளவில் தீர்க்கப்படவில்லை என்று நீங்கள் கருதினால், மனநலச் சட்டத்தின்படியான (PsychKG) விருப்பமில்லா சேர்க்கைகள் பிரிவு 30-ன்படி மேற்பார்வையிடும் மாவட்ட அரசு அதிகாரிக்கு நீங்கள் புகார் அளிக்கலாம்**

- Bezirksregierung Köln, Krankenhausaufsicht, Postfach, 50606 Köln
- Bezirksregierung Düsseldorf, Krankenhausaufsicht, Postfach 300865, 40408 Düsseldorf

### சட்டப்பூர்வ அறிவிப்பு:

2வது பதிப்பு, அக்டோபர் 2022
உள்ளடக்கத்திற்கு பொறுப்பான நிறுவனம்:
LVR-Dezernat 8/ 84.20 in Verbindung mit 81.30 (Rechtsabteilung). தொடர்புக்கு: Uwe Blücher 84.20.

### பங்களிப்பாளர்கள்:

LVR சிகிச்சையகங்களின் மீட்பு உதவி ஊழியர்கள், உறவினர்களின் பிரதிநிதிகள், மனநல மருத்துவர்கள் மற்றும் உளவியலாளர்கள், செவிலிப்பணித் தலைவர், மக்கள் தொடர்பு அதிகாரி, SEIB துணை-திட்ட மேலாண்மை, ஒருங்கிணைப்பு அலுவலர், ZBM, LVR சிகிச்சையகங்களின் செவிலிப்பணி இயக்குநரகம் மற்றும் மருத்துவ இயக்குநரகங்கள் ஆகியோர் இந்த துண்டுப் பிரசுரம் உருவாவதற்குக் கணிசமாகப் பங்களித்தோர் ஆவர்.

எழுத்துப்பூர்வமாக வழங்குதல்: “Verein Netzwerk Leichte Sprache e.V.” சங்கமும் அதேபோல LVR துறை 1ன் சுற்றறிக்கை ஆணை எண் 2-ன்படியும் அமைத்த புரிந்து கொள்ள எளிமையான மொழியைப் பயன்படுத்துதல் குறித்த விதிகளின் அடிப்படையில் எளிமையாகப் புரியும் மொழியில் (தனிப்பட்ட குடிமக்கள் சார்ந்த) அமைக்கப்பட்டுள்ளது.

### மொழி பதிப்புகள்:

மனநலச் சட்டத்தின்படியான விருப்பமில்லா சேர்க்கைகளுக்கான (PsychKG) துண்டுப் பிரசுரத்தின் மொழிபெயர்ப்புகள் 32 மொழிகளில் கிடைக்கின்றன.

இந்தச் சுற்றறிக்கையின் பதிப்புரிமை அறிவிப்புடன் கூடிய வெளிப்புற விநியோகத்திற்கு:
© LVR-Klinikverbund und Verbund Heilpädagogischer Hilfen

T